DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.91/2021

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | குணாநிதி |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர்**)**

**BNSS** பிரிவு **348-**ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை **Date : 24.04.2026**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.B.A., படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். விவசாயத்தை தவிர வேறு எதுவும் தொழில் செய்து வருகிறேனா என்றால் கத்திரி, தக்காளி, மிளகாய் செடிகள் கொண்ட நர்சரி நடத்தி வருகிறேன். நான் மேற்படி விவசாயம், நர்சரி ஆகியவற்றை எத்தனை ஆண்டுகளாக செய்து வருகிறேன் என்றால் சுமார் 20 வருடங்களாக செய்து வருகிறேன்.

நான் விவசாயம் தவிர தமிழ்நாடு அரசு பணிக்கு தேர்வுகள் எழுதி வந்தேன் என்றால் சரிதான். மாதம் எனக்கு எவ்வளவு வருமானம் என்றால் சுமார் ரூ.40,000/- முதல் ரூ.60,000/- வரை வரும். அவ்வாறெனில் வருடத்திற்கு சுமார் ரூ.6,00,000/- முதல் ரூ.7,00,000/- வரை வருமானம் வரும் என்றால் சரியல்ல. வருடத்திற்கு சுமார் ரூ.4,00,000/- வரை வருமானம் வரும். நான் வருமானவரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை.

எதிரிக்கு கடன் கொடுப்பதற்கு முன்னர் அவரை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் மூன்று வருடங்களாக தெரியும். எதிரி என்னிடம் பணம் பெறுவதற்கு எத்தனை நாட்களுக்கு முன்னர் எங்கு வைத்து என்னிடம் பணம் கேட்டார் என்றால் சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் எனது வீட்டில்வைத்து பணம் கேட்டார். எதிரி என்னிடம் பணம் கேட்டபோது அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் எனது அம்மா மற்றும் எனது அப்பா ஆகியோர் இருந்தார்கள். எதிரிக்கு தொகையை எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரொக்கமாக கொடுத்தேன். மேற்படி ரொக்கமானது எந்த ரூபாய் நோட்டுகள் என்றால் 500 ரூபாய் நோட்டுகள் ஆகும். 14 கட்டுகளாக கொடுத்தேன்.

எதிரிக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் தொகையை எவ்வாறு தயார் செய்து கொடுத்தேன் என்றால் நான் வீடுகட்டுவதற்காக சேமித்து வைத்திருந்த பணத்தை கொடுத்தேன். 2022ம் வருடம் தான் எதிரி கோயமுத்தூரில் இருந்து இராசிபுரத்தின் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் உதவி வேளாண்மை அலுவலராக பணிமாற்றம் பெற்று வந்தார் என்றாலும், அதனால் நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. பொதுவாக ரூ.20,000/- க்கு மேலான பரிவர்த்தனைகளை காசோலை மூலமாகவோ அல்லது வங்கி பண பரிவர்த்தனை மூலமாகவோ தான் செய்யவேண்டும் என்றால் சரிதான்.

கடன் பெறுவதற்கு மூன்று வருடங்களுக்கு முன்னரே எதிரியை எனக்கு தெரியும் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரி நீதிமன்றத்திற்கு வரும்போதுதான் எதிரி என்னை நேரடியாக பார்த்தார் என்றாலும், எதிரிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றாலும் சரியல்ல. நான் எனது வீட்டில் வைத்து எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றாலும், எதிரிக்கு எனது வீட்டின் விலாசம் மற்றும் இடம் மற்றும் எனது தொழில் ஆகியவை எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல.

**(எதிரி தரப்பு வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**